2007 ஏப்ரல் 24]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல, இத்தகைய பள்ளிகளை அரசு ஏற்றுக்கொள்வதற்கு அவர்கள் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி அரசுக்கு அனுப்புவார்கள் என்று சொன்னால், அந்த நிலம், கட்டடம் போன்ற தளவாடங்களையெல்லாம் அரசின் பொறுப்பிலே ஒப்படைப்பார்கள் என்று சொன்னால், அரசு அதை ஏற்றுக்கொள்வதற்கு வழிவகை இருக்கிறது. ஏற்கெனவே இந்த மன்றத்திலேகூட அதுபற்றிக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தின்மூலமாக சில பள்ளிகள் கொண்டு வரப்பட்டு, அரசு அவற்றை ஏற்றுக்கொள்ளக்கூடிய நிகழ்வுகளும் இருக்கின்றன. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்த குருகுலம் பள்ளியைக்கூட அத்தகைய ஒரு தீர்மானத்தின்மூலம் அவர்கள் அரசுக்கு அனுப்பியிருப்பார்கள் என்று சொன்னால், அரசு அதை முறைப்படிப் பரிசீலித்து, அரசினுடைய பொறுப்பிலே அதனை ஏற்றுக்கொள்வதற்கு அரசு ஆவன செய்யும்.

அரசு நிதி உதவியைப்பெறுகின்ற பள்ளிகளிலே இருக்கக்கூடிய ஆசிரியர் பணியிடங்களைப் பொறுத்தமட்டிலே, அது நீண்ட காலமாக இருக்கக்கூடிய ஒரு பிரச்சினை. அதற்கு நான் பல முறை இந்த மன்றத்திலேகூட பதில் சொல்லியிருக்கிறேன். அரசினுடைய நிதியாதாரத்தைப் பொறுத்து, மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே, வரக்கூடிய காலங்களிலே நாங்கள் கலந்து பேசி, அது குறித்து ஆவன செய்வதற்கு அரசு ஆராயும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 130, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ராஜகுமார், மரண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

130—

மயில்கள் கணக்கெடுப்பு

***8747—திரு. எஸ். ராஜகுமார்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2007 ஏப்ரல் 24

(அ) தேசியப் பறவையான மயில்கள் குறித்த கணக்கெடுப்புப் பணி தமிழ்நாட்டில் நடைபெறுகிறதா?

(ஆ) ஆம் எனில், தமிழகத்தில் உள்ள மயில்களின் எண்ணிக்கை எவ்வளவு? மயில்களைப் பாதுகாக்க எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) 2005-ல் எடுக்கப்பட்ட கணக்கின்படி தேசியப் பறவையான மயில்களின் எண்ணிக்கை, பாதுகாக்கப்பட்ட பகுதிகளில் 110 என்றும், பாதுகாக்கப்பட்ட பகுதிகளுக்கு வெளியே 4,884 என்றும் கணக்கிடப்பட்டிருக்கிறது. மயில்களைக் காப்பதற்காக, 1972 வன உயிரினப் பாதுகாப்புச் சட்டப்படி மயில்களை இறைச்சிக்காகவோ, அவற்றினுடைய இறக்கைகளுக்காகவோ வியாபார நோக்கோடு வேட்டையாடுபவர்கள்மீது அந்தச் சட்டப்படிக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ராஜகுமார், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.எம். பழனிசாமி.

திரு. ஆர்.எம். பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பர்கூர் வனப் பகுதியிலே பர்கூர் இன மாடுகள் என்று சமீப காலத்திலே 40 ஆயிரம் மாடுகளுக்குமேல், அவைகளுக்குப் பட்டிகள் மட்டுமே உண்டு. அவை கட்டுத் தறி போட்டுக் கட்டப்படுகிற மாடுகள் அல்ல. வனப் பகுதிகளிலே மேய விடப்படுகின்ற மாடுகள். அது...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக் கேள்வி மயில் சம்பந்தப்பட்டது.

திரு. ஆர்.எம். பழனிசாமி: வனப் பகுதியில் இருப்பதனால் சொல்கிறேன். வேறு ஒன்றும் இல்லை. மத்திய ஆராய்ச்சி நிலையமும், தமிழக ஆராய்ச்சி நிலையமும் கலந்து பேசிப் பார்த்ததிலே, ஆய்வு மேற்கொண்டதற்குப் பின்னாலே, 20 ஆயிரம் மாடுகள்தான் இப்போது இருக்கின்றன என்றும், அந்த இனம் அழிந்து வருகிறது என்றும், சமீபத்திலே செய்தித்தாள்களிலே குறிப்புகள் வந்திருக்கின்றன. ஆக, அந்த இனத்தைக் காப்பதற்கு வனத் துறை ஏதாவது நடவடிக்கை எடுக்குமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

2007 ஏப்ரல் 24]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்குள்ள அந்தக் காட்டு மாடுகளையெல்லாம் பத்திரமாகப் பாதுகாப்பதற்கு, அவை வெளியே வராமல் இருப்பதற்காக, அந்தப் பகுதியிலே வேலிகள் எல்லாம் அமைக்கப்பட்டிருக்கின்றன. அகழிகள் வெட்டப்பட்டிருக்கின்றன. எனவே, அவற்றைப் பாதுகாப்பதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

3. தகவல் கோரல்

எதிர்க்கட்சித் தலைவர்மீது வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தப்படுமென ஜெயா தொலைக்காட்சி அலுவலகத்திற்கு வந்த மிரட்டல் கடிதம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஜெயா தொலைக்காட்சியை முடக்க சதி என்பது குறித்தும், அ.இ.அ.தி.மு.க. பொதுச் செயலாளர் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்மீது வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தப்படும் என்று மிரட்டல் கடிதம் அனுப்பப்பட்டது குறித்தும் அ.இ.அ.தி.மு.க.-வைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் ஓ. பன்னீர்செல்வம், கே.ஏ. செங்கோட்டையன், டி. ஜெயக்குமார் ஆகியோர் பேரவை விதி 56-ன்கீழ் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இதனைத் தகவல் கோரல் என்ற முறையில் எடுத்துக்கொள்கிறேன். இது குறித்து சுருக்கமாகப் பேசலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ. பன்னீர்செல்வம்.

***திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 21-4-2007 அன்று ஜெயா டி.வி.யினுடைய செய்திப் பிரிவிற்கு வரப்பெற்ற ஒரு கார்டில் ஒரு தகவல் எழுதப்பட்டு, அதில், "தமிழக முதல்வர் பற்றிய செய்திகளை வெளியிட வேண்டாம்; மீறினால் மாண்புமிகு அம்மா அவர்கள்மீது வெடிகுண்டுத் தாக்குதல்